தமிழ்நாடு தகவல் ஆணையம்
எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்),
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 09.11.2020**

**முன்னிலை**

**திரு. ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

……………

**வழக்கு எண். SA5595/F/2019**

**திரு R.வெங்கடேசன் … மேல்முறையீட்டாளர்**

**/ எதிர் /**

**பொதுத் தகவல் அலுவலர்/**
**தலைமை கண்காணிப்பாளர்,**
**தமிழ்நாடு வக்ஃபு வாரியம்,**
**எண்.1, ஜாபர்சிராங் தெரு,**
**வள்ளல்சீதக்காதி நகர், சென்னை - 600 001. … பொது அதிகார அமைப்பு**

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **08.04.2019** |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **09.05.2019** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **17.06.2019** |

******

**ஆணை**

இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (09.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு R.வெங்கடேசன் மற்றும் பொதுத் தகவல் அலுவலர்/ தலைமை கண்காணிப்பாளர், தமிழ்நாடு வக்ஃபு வாரியம், எண்.1, ஜாபர்சிராங் தெரு, வள்ளல் சீதக்காதி நகர், சென்னை ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் **08.04.2019** தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், திருச்சிராப்பள்ளி மாவட்டம், கிழக்கு வட்டம்,

(ஒருங்கிணைந்த திருச்சிராப்பள்ளி வட்டம்) வரகனேரி கிராமத்தில் தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள வக்ஃபுகளின் பெயர் விபரம், அந்தந்த வக்ஃபுகளுக்கு சொந்தமான அசையா சொத்துக்களின் விவரம், அசையா சொத்துக்கள் அமைந்துள்ள புல எண், விஸ்தீரணம் விவரம் அதற்குரிய பதிவேட்டின் நகல், திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி கிழக்கு வட்டம் (ஒருங்கிணைந்த திருச்சிராப்பள்ளி வட்டம்) செங்குளம் கிராமத்தில் தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள வக்ஃபுகளின் பெயர் விவரம், அந்தந்த அசையா சொத்துக்கள் அமைந்துள்ள புல எண், விஸ்தீரணம் விவரம் அதற்குரிய பதிவேட்டின் நகல், தமிழ்நாட்டில் வக்ஃபு கண்காணிப்பாளர் அலுவலகம் எங்கெங்கு உள்ளது என்ற விபரம், வக்ஃபு கண்காணிப்பாளரின் அதிகாரங்களும், கடமைகளும் குறித்த உத்தரவு நகல், வக்ஃபு கண்காணிப்பாளராக நியமனம் பெற என்னென்ன தகுதிகள் வேண்டும் என்ற விவரம் அதற்குரிய உத்தரவு நகல், வக்ஃபு கண்காணிப்பாளரை நியமனம் செய்யும் அலுவலரின் பதவி, பெயர் விவரம் போன்ற தகவல்களை வழங்கக்கேட்டு பொதுத் தகவல் அலுவலர்/ முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு வக்ஃபு வாரியம், எண்.1, ஜாபர்சிராங் தெரு, வள்ளல்சீதக்காதி நகர், சென்னை என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காததால் மேல்முறையீட்டாளர் 09.05.2019 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர்/ முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு வக்ஃபு வாரியம், எண்.1, ஜாபர்சிராங் தெரு, வள்ளல்சீதக்காதி நகர், சென்னை அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காததால் மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவலை வழங்க உத்தரவிடுமாறு கோரி 17.06.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (09.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தொலைபேசி வாயிலாக ஆஜராகி, பொதுத் தகவல் அலுவலர் தனக்கு எந்தத் தகவலும் வழங்கவில்லை என தெரிவித்து தான் கோரிய தகவலை பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் 6(1) மனுவில் கோரிய தகவல்களை முழுவதுமாக வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

6. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவலையும் இணைத்து பரிசீலனை செய்கையில் மேல்முறையீட்டாளருக்கு சரியான தகவல் வழங்கப்படவில்லை என்பது தெரிகிறது. எனவே, இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கின்றது :-

- மேல்முறையீட்டாளர் 08.04.2019 தேதியிட்டு கோரிய தகவல்களை முழுவதுமாக **இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி அனுப்பிவைத்து, மேல்முறையீட்டாளர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலினை இணைத்து ஒரு அறிக்கையாகத்**

தயாரித்து இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.

- மேல்முறையீட்டாளர் 08.04.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை வழங்கத் தவறும்பட்சத்தில் பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1)-ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஆணையம் எச்சரிக்கின்றது.

ஒம்/- (ச.த. தமிழ்குமார்)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**<u>வழக்கு எண். SA5595/F/2019</u>**

**பெறுநர்**

**பொதுத் தகவல் அலுவலர்/**
**தலைமை கண்காணிப்பாளர்,**
**தமிழ்நாடு வக்ஃபு வாரியம்,**
**எண்.1, ஜாபர்சிராங் தெரு,**
**வள்ளல்சீதக்காதி நகர், சென்னை - 600 001.**

**<u>மனுதாரர்</u>**

**திரு R.வெங்கடேசன்,**
**த/பெ. ராஜமாணிக்கம்,**
**எண்.2/48, மெயின்ரோடு,**
**தாளக்குடி அஞ்சல்,**
**திருச்சி மாவட்டம் - 621 216.**

Copy to: Judgement File/ Spare.
SM/ PC-19.11.2020